DINAKARAN-21-JUL-2016

ஈஷாவில் குருபவுர்ணமி விழா

கோவை ஈஷா யோகா மையத்தில் குருபவுர்ணமி விழா நேற்று முன் தினம் நடந்தது. தியான நிகழ்ச்சியில் திரளானோர் பங்கேற்றனர். உள்படம்: அருளுரையின்போது சத்குரு ஜகி வாசுதேவ் பேசினார்.

கோவை, ஜூலை 21: கோவை, வெள்ளிங்கிரி மலையடிவாரத்தில் அமைந்துள்ள ஈஷா யோக மையத்தில் குருபவுர்ணமி விழா நேற்று முன்தினம் நடந்தது. ஆதியோகி ஆலயத்தில் நடந்த தியானம் மற்றும் அருளுரையின்போது சத்குரு ஜகி வாசுதேவ் பேசியதாவது:

ஒளிதடுப்பதைமட்டுமே மனிதர்களின் கண்களால் காண முடியும். காற்றை ஒளி தடுப்பதில்லை. அதன் காரணமாக காற்றை காண முடியவில்லை. கண்களை மூடிய நிலையில் கூட பழைய நினைவுகளை காண்கிறோம். ஆனால், உண்மையை காண மனிதர்களுக்கு மூன்றாவது கண் அவசியம். மூன்றாவது கண் என்பது நெற்றியில் முளைப்பதல்ல. வேறு நிலையில் வேறு பரிமாணத்தில் விழித்தெழுவதையே மூன்றாவது கண் என்கிறோம்.

மனிதர்கள் உறங்குதாய் மடி தேவை, விழித்தெழுகுருவின் அருள் மடி தேவை. உடல், மனம் தாண்டி மனிதனால் வாழ முடியும் என்கிற கருத்து 15 ஆயிரம் ஆண்டுகளுக்கு முன்னால் தொடங்கியது.

இது மேற்கத்திய மக்களின் ஆளுமையால் மறைக்கப்பட்டது. மேற்கத்தியர்கள் ஆட்சி செய்த அனைத்து நாடுகளிலும், அந்நாடுகளின் கலாசாரத்தை அழித்தனர். ஆனால், இந்தியாவின் கலாசாரத்தை அழிக்க முடியாது. கலாசாரம், மொழி, ஆன்மிகம் அனைத்து மனிதர்களின் முன்னேற்றத்துக்கு அவசியம். இதனை மீண்டும் உருவாக்க பெரிய புரட்சி செய்ய தேவையில்லை. நமக்குள் மாற்றம் கொண்டு வருவது மூலம் அதனை செய்ய முடியும். இவ்வாறு ஜகி வாசுதேவ் பேசினார்.

இதில், தியான லிங்கத்தில் பால் மற்றும் நீர் அபிஷேகம் காலை 6 மணி முதல் மாலை 6 மணி வரை நடந்தது. இந்நிகழ்ச்சியில் நாடு முழுவதும் இருந்து சுமார் 12 ஆயிரத்துக்கும் மேற்பட்ட பக்தர்கள் பங்கேற்றனர்.